4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 5/2022** **நாள்: 11.06.2026** **எ.ம.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஈஸ்வரன்** | தொழில் | : மோட்டார் வாகன ஆய்வாளர் கிரேடு 1 |
| த/பெ | : பழனிசாமி | கிராமம் | : பழனி |
| வயது | : 59 | தாலுகா | : பழனி |
| | | மாவட்டம் | : **திண்டுக்கல்** |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -**

1. 04.02.2021 அன்று இந்த விபத்து சம்பந்தபட்ட வாகன பதிவெண் TN 94 A 9200 வாகனத்தை நாங்கள் ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்பித்துள்ளாம். மேற்படி வழக்கு சம்பந்தபட்ட வாகனம் விபத்தில் ஈடுபட்டதாக மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மீது சாமிநாதபுரம் காவல் நிலைய குற்ற எண்.14/2021 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் பெயர் அவர் சமர்பித்த ஓட்டுநர் உரிமத்தில் லாலு குமார், த/பெ.சந்திரதேவ் தாஸ் என்று உள்ளது. விபத்து சமயத்தில் மேற்படி ஓட்டுநருக்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் இருந்தது. மேற்படி ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை பரிவாகன் என்ற செயலியில் நான் சரிபார்க்கவில்லை. சில மாநிலங்களின் ஓட்டுநர் உரிமம் பரிவாகன் செயலியில் வருவதில்லை. 3வது எதிர்மனுதாரர் மேற்படி பரிவாகன் செயிலியில் மேற்படி ஓட்டுநரின் உரிமத்தை சரிபார்த்தாரா என்று எனக்கு தெரியாது.

2. மேற்படி ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் போலியானதா என்று என்னால் சொல்லமுடியாது. மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை மீறி வாகனத்தை ஓட்டினார் என்று என்னால் சொல்லமுடியாது. மேற்படி ஓட்டுநர்

உரிமத்தில் உள்ள QR Code ஐ சரிபார்த்ததில் அது உண்மை என்று தெரியவந்தது. எங்கள் அலுவலகத்தில் மேற்படி ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளோம். அந்த அறிக்கையின் நகலை நான் சமர்பிக்கிறேன். மேற்படி **அறிக்கையின் நகல் சா.சா.ஆ.1.**

**குறுக்கு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.06.11 15:32:57 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.